அருளிச்செயல் பாகவதம்

ஸ்ரீ:

முகவுரை

திவ்வியப்பிரபந்தப் பூஞ்சோலையிலிருந்து பறித்த பூக்கள் பல; இங்கு அவை கண்ணன் திருவிளையாட்டை அணி செய்கின்றன. அவ்விளையாட்டில் தம்மை இழந்த ஆழ்வார்களின் பெருமை விளங்கவே, இம்மாலை தொடுக்கப்பட்டிருக்கின்றது.

செந்தமிழ்ச்செல்வர் ஸ்ரீகாஞ்சீ மஹாவித்வான் பிரதிவாதிபயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியர் ஸ்வாமியவர்களின் நன் முயற்சியினால் இவ்விரண்டாம் பதிப்பு வெளியாகின்றது. ஸ்வாமியவர்களுக்கும், ஊக்க மளித்த நண்பர்களுக்கும் மனமார்ந்த நன்றி.

அன்பன்

சே. ரங்கஸ்வாமி

21-2-1949

* * *

முன்னுரை

ஸ்ரீமான் சே. ரங்கஸ்வாமி ஐயங்காரென்னும் பக்த சிகாமணி "முத்தும் மணியும் வயிரமும் நன்பொன்னுந் தத்திப்பதித்தாற் போல்" அமைத்துள்ள பாசுரப்படி ஸ்ரீ பாகவதத்தைக் கண்ணுற்றுப் பெருமகிழ்ச்சி கொண்டேன். முற்காலத்தில் பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீராமாயண கதைகளை மாத்திரம் இங்ஙனே தொடுத்தருளினர். ஸ்ரீ க்ருஷ்ண பிரானுடைய கதைகளுக்கு அத்தகைய அமைப்பு இல்லா திருந்தவோர் குறையை இந்த பக்த சிகாமணி மூலமாய் எம்பெருமான் தீர்த்துக் கொண்டது எம்மனோரது நல்வினைப் பயனேயாம். இதனை முகபாடஞ்செய்து பக்தர்கள் நித்தியானுசந்தானஞ் செய்வது மிகவும் ஏற்கும்.

இங்ஙனம்,

காஞ்சீபுரம் பிரதிவாதிபயங்கரம்,

அண்ணங்கராசாரியர்,

(வேத வேதாந்த வைஜயந்தீ பாடசாலைத் தலைவர்)

15-9-1934.

ஸ்ரீ :

அருளிச்செயல் பாகவதம்

க்ஷீராப்தி வைபவம்

	பாசுரக் குறிப்பு	
பாலாலிலையில் துயில் கொண்ட பரமன்	நாய்ச்சியார்	13-2
மன்னிய நாகத்தணை மேலோர் மாமலைபோல்	பெரியதிருமடல்	2
சுடராழி சங்கிருபால் பொலிந்து தோன்றத்	பெரியதிரு	2-10-9
திருமடந்தை மண்மடந்தை யிருபாலுந் திகழ	,,	3-10-1
ஆயிரந்தோள் பரப்பி முடியாயிர மின்னிலகக்	பெரியாழ்	4-3-10
கடலோதம் கால் அலைப்பக்	முதல்	16
கடலோன் கைமிசைக் கண் வளர்வது போல்	திருவாசிரியம்	1
உன்னிய யோகத்துறக்கம் தலைக்கொண்டு	பெரியதிருமடல்	8
இணையில்லா இன்னிசையாழ் கெழுமி இன்பத்		
தும்புருவும் நாரதனு மிறைஞ்சி யேத்தக்	பெருமாள்	1-5
கொந்தலர்ந்த நறுந்துழாய் சாந்தம் தூபம்		
தீபங் கொண்டமரர் தொழப்	பெரியதிரு	2-10-2
பத்தர்களும் பகவர்களும் பழமொழிவாய் முனிவர்களும்		
சித்தர்களும் தொழுதிறைஞ்ச	பெரியாழ்	4-9-6
அருள் கொண்டாடும் அடியவரின்புற	கண்ணி	8
ஏழுலகுந் தனிக்கோல் செல்ல வீற்றிருந்து,	திருவாய்	4-5-1

அவதார காரணம்

விண்கொள் அமரர்கள் வேதனை தீர	பெரியாழ்	1-2-16
மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்யப்	பெருமாள்	1-10
பாரேறு பெரும் பாரந்தீரத்	பெரியதிரு	2-10-8
துவரிக்கனிவாய் நிலமங்கை துயர்தீர	பெரியதிரு	8-8-9
மண்ணின் பாரம் நீக்குதற்கே		
வேண்டித் தேவரக்கச்	திருவாய்	6-4-5
சாது சனத்தை நலியுங் கஞ்சனைச் சாதிப்பதற்கு	,,	3-5-5
என்ன நோன்பு நோற்றாள் கோலோ இவனைப் பெற்ற		
[வயிறுடையா ளென்னும் வார்த்தை யெய்துவிக்கத்	பெரியாழ்	2-2-6
தந்தை காலில் பெருவிலங்கு தாளவிழ	பெரிய	7-5-1
மக்களறுவரைக் கல்லிடை மோத இழந்த	பெரியாழ்	5-3-1
தாயைக்குடல் விளக்கம் செய்யக்	திருப்பாவை	5

அவதாரம்

கதிராயிர மிரவி கலந்தெரித்தா லொத்து	பெரியாழ்	4-1-1
மல்லை மூதூர் வடமதுரையில்	திருவாய்	9-1-6
மத்தக்களிற்று வசுதேவர் தம்முடைச்		
சித்தம் பிரியாத தேவகிதன் வயிற்றில்		
அத்தத்தின் பத்தாநாள் தோன்றிக்	பெரியாழ்	1-2-6

	பாசுரக் குறிப்பு	
கஞ்சன் வலைவைத்தவன்று காரிருள் எல்லிற் பிழைத்து	நாய்ச்சியார்	3-9
எடுத்த பேராளன் நந்த கோபன்றனின் னுயிர்ச் சிறுவ		
[னென்னக்	திருவாய்	8-1-3
கூர்வேல் கொடுந் தொழிலன் நந்தகோபன் குமாரனைத்	திருப்பாவை	1
தெய்வ நங்கை யசோதைக்குப்	பெருமாள்	7-5
போத்தந்த பேதைக் குழவியாய்ப்	பெரியாழ்	1-2-1
பலதேவற் கோர் கீழ்க்கன்றாய்	நாய்ச்சியார்	41-1
ஆயர்கள் நாயகனாய்	பெரியாழ்	1-5-11
ஆயர்பாடிக்கு அணிவிளக்காய்க்	,,	2-2-5
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்துக்குங் கொழுந்தாய்	திருப்பாவை	17
காண்டலின்றிக்	திருவாய்	6-4-5
கொண்டு வளர்க்கக் குழவியாய்த்தான் வளர்ந்து	இரண்டாய்	98

ஆயர்பாடியில் மங்களங் கொண்டாடல்

எண்ணெய் சுண்ணம் எதிரெதிர் தூவிடப்	பெரியாழ்	1-1-1
பாடுவார்களும் பல்பறை கொட்ட	,,	1-1-2
அண்டர் மிண்டிப் புகுந்து நெய்யாட	,,	1-1-5
அயலிடத்துப் பேர்ந்து,	பெரிய	10-5-4
தத்துக் கொண்டாள் கொலோ! தானே பெற்றாள்		
சித்த மனையாள் அசோதை யென்னப் [கொலோ!	பெரியாழ்	2-1-7
பேணிச்சீருடைப் பிள்ளை	,,	1-1-3
ஒருத்தி மகனா யொளித்து வளரத்,	திருப்பாவை	25

பூதனை வதம்

தீமனத்தான் கஞ்சனது வஞ்சனையில் திரியும்	பெரிய	3-10-7
பெண்மை மிகு வடிவு கொடு	,,	3-9-6
வன்பேய்ச்சி தன் மகனாகத்தான் முலையுண்ணக் கொடுக்க	,,	10-4-7
முலையுண்பான் போலே முனிந்துண்டு	இரண்டாந்	8
வஞ்சனத்து வந்த பேய்ச்சி யாவி பாலுள்வாங்கிச்	திருச்சந்த	43
சூருருவின் பேயளவு கண்டு,	முதல்	3

சகட பங்கம்

மாணிக்கங் கட்டி வயிர மிடை கட்டி	பெரியாழ்	1-3-1
ஆணிப்பொன்னாற் செய்த வண்ணச் சிறுத்தொட்டிலில்	,,	1-2-5
உறங்குவான் போலே கிடந்து	பெரியாழ்	1-2-3
நாள்களோர் நாலைந்து திங்களளவிலே	,,	1-2-11
தாளை நிமிர்த்து	திருவாய்	2-1-8
உருளும் சகட முதைத்து,		

கண்ணனுக்கு நாமகரணஞ் செய்தல்

	பெரியாழ்	1-1-4
ஆய்ப் பாடியாயர்		
பத்து நாளுங் கடந்த விரண்டா நாள்	,,	1-1-8
எத்திசையும் சயமரங் கோடித்துக்	திருநெடுக்	3
கருவடிவிற் செங்கண்ண வண்ணன்றன்னை		

		பாசுரக் குறிப்பு
வேதம் வல்லார்களைக் கொண்டு	திருவாய்	4-6-8
கார்முகிலே! யென் கண்ணா!	,,	2-3-7
செங்கணெடுமால் சிரீதரா வென்றழைத்து	பெரியாழ்	4-6-2
காவினால் கவிற்றின்ப மெய்த,—	கண்ணி	2

பால லீலைகள்

மாயக் கூத்தன்	திருவாய்	8-5-1
தன் முகத்துச்சுட்டி தூங்கத் தூங்கத் தவழ்ந்து போய்ப்	பெரியாழ்	1-4-1
பொன்முகக் கிண்கிணியார்ப்பப் புழுதியளைந்து,		
கோல நறும் பவளச் செந்துவர் வாயினிடைக்	,,	1-5-9
கோமள வெள்ளி முளைப்போல் சில பல்லிலகக்		
கணகணசிரித்து வந்து முன் வந்து	,,	1-7-4
நின்று முத்தந்தந்து		
ஆயர்கள் போரேறுச் செங்கீரையாடி,	,,	1-5-2
எண்ணெய்க் குடத்தை யுருட்டி இளம்பிள்ளை கிள்ளி [யெழுப்பிக்	,,	1-4-11
கண்ணைப்புரட்டி விழித்துக் கழைகண்டு செய்து,	பெரியாழ்	2-4-6
வெண்ணெய் விழுங்கி விரைய வுறங்கி,	,,	2-5-3
பானையிற் பாலைப் பருகிப் பற்றாதாரெல்லாஞ் சிரிப்ப	,,	2-7-1
மடங்கொள் மதிமுகத்தாரை மால் செய்து,	,,	2-7-7
அழகிய வாயிலமுத வூறல் தெளிவுற	,,	1-4-5
மழலை முற்றாத இளஞ்சொல்லால்		
வானிலா வம்புலீ! சந்திரா! வாவென்று	,,	1-6-4
அம்புலி விளித்து,	,,	1-4-3

யசோதை, பிள்ளைவாயுள் வையமேழுங் கண்டது

மண்ணும் மலையும் கடலும் உலகேழும்	,,	1-2-18
உண்ணும் திறந்து மகிழ்ந்து,		
கையும் காலும் நிமிர்த்துக் கடார நீர்	,,	1-1-6
பைய வாட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்		
ஐய நாவழித்தாளுக்கு அங்காந்திட		
வாயுள் வையமேழுங் காண		
ஆடியாடி யசைந்தசைந்திட்டு அதனுக் கேற்ற கூத்தையாடி,	,,	2-2-10

யசோதை கண்ணனை உரலிற் கட்டுதல்

வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்	திருப்பாவை	3
நீங்காத செல்வம் நிறைக்க,		
வெள்ளிமலை யிருந்தாலொத்த வெண்ணெயைத்	பெரிய	10-7-3
தாயர் மனங்கள் தடிப்ப	,,	10-5-2
உளங்குளிர வமுது செய்து	,,	3-9-7
விரலோடு வாய் தோய்ந்த வெண்ணெய் கண்டு	முதல்	24
ஒளியா வெண்ணெ யுண்டானென்று உரலோடு ஆய்ச்சி	பெரிய	6-7-4
விளியா ஆர்க்க ஆப்புண்டு விம்மியழுது, [ஒண்கயிற்றால்		
பொத்தவுரலைக் கவிழ்த்து அதன்மேலேறித்	பெரியாழ்	1-10-7

பாசுரக் குறிப்பு

தித்தித்த பாலும் தடாவினில் வெண்ணெயும்
மெத்தத் திருவயிறு ஆர விழுங்கி,
சொல் அசோதை — பெரியாழ் 2-3-13
அன்புற்று நோக்கி யடித்தும் பிடித்தும் அனைவர்க்கும் [காட்ட — ,, 2-3-8
ஊரார்க ளெல்லாருங் காணக் — சிறியதிருமடல் 35
கண்ணி நுண் சிறுத்தாம்பினால் கட்டுண்டு — கண்ணி 1
பெருமா வுரலில் பிணிப்புண்டிருந்து — பெரியாழ் 1-2-10
விண்ணெல்லாங் கேட்க வழுது — ,, 2-3-6
எழில்கொள் தாம்பு கொண்டடிப்பதற்கு எள்கி, — பெருமாள் 7-8

மருத மரங்களை முறித்தது

மணமருவு தோளாய்ச்சி ஆர்க்கப் போய் உரலோடும் — பெரிய 8-3-4
ஒருங்கொத்த இணைமருதம் உன்னிய வந்தவரை — பெரியாழ் 1-6-5
ஊருகரத்தினொடும் உந்தி
எண்டிசையோரும் வணங்க
இணை மருதூடு நடந்திட்டு, — பெரிய 3-3-3

மாடு கன்றுகளை மேய்த்தல்

அழகிய பைம் பொன்னின் கோல் அங்கைக் கொண்டு
கழல்கள் சதங்கை கலந்தெங்கும் ஆர்ப்ப
மழகன்றினங்கள் மறித்துத் திரிந்து, — பெரியாழ் 1-3-20
புகழ்ப் பலதேவனென்னும் தன் நம்பியோடப் பின் [கூடச் சென்று, — ,, 1-8-5
தன்நேர் ஆயிரம் பிள்ளைகளோடு தளர்நடையிட்டு, — ,, 3-1-1
வெண்ணெய் விழுங்கி வெறுங்கலத்தை வெற்பிடையிட்டு [அதனோசை கேட்டு, — பெரியாழ் 2-9-1
அசல் அகத்தார் பரிபவம் பேச — ,, 2-9-2
இல்லம் புகுந்தவர் மகளைக்கூவிக் கையில் வளையைக் [கழற்றிக் கொண்டு
கொல்லையினின்றுங் கொணர்ந்து விற்ற அங்கொருத்திக்கு [அவ்வளை கொடுத்து — ,, 2-9-10
நல்லன நாவற் பழங்கள் கொண்டு,
பறவைகள் பின் சென்று கானஞ்சேர்ந்துண்டு — திருப்பாவை 28
இட்டமான பசுக்களை இனிது மறித்து நீருட்டி — நாய்ச்சியார் 14-1
விட்டுக்கொண்டு விளையாடி,
கணங்களோடு மின் மேகங் கலந்தாற்போல் வனமாலை — ,, 14-2
மினுங்க நின்று விளையாடி, — மூன்றாம் 42
கோவலனாய் ஆநிரைகள் மேய்த்துக் குழலூதிக்
கோவிந்தன் வருகிற கூட்டங் கண்டு
மழை கொலோ வருகின்றதென்று சொல்லி மங்கைமார் — பெரியாழ் 3-4-1
[சாலகவாசல்பற்றி நுழைய குழல்களுங் கீதமுமாகி — நாய்ச்சியார் 2-9
முற்றத்தூடு புகுந்து தன்முகங் காட்டிப் புன் முறுவல் [செய்து

பாசுரக் குறிப்பு

பஞ்சிய மெல்லடிப் பிள்ளைகளுடன்
வைத்த நெய்யுங் காய்ந்த பாலும் வடிதயிரும் நறு
[வெண்ணெயு மித்தனையும் பெற்றறியாமே — பெரியாழ் 2-2-2
ஆயிரகாழி நெய்யைப் பாகந்தான்
வையாதுண்டு, — பெரிய 10-7-10

வத்ஸாஸுர பகாஸுர வதம்

கானக வல்விளவின் காயுதிரக் கருதிக்
கன்றது கொண்டெறிந்து, — பெரியாழ் 1-6-4
பள்ளத்தில் மேயும் பறவையுருக் கொண்டு
கள்ளவசுரன் வருவானைத்தான் கண்டு
புள்ளிதுவென்று பொதுக்கோ வாய் கீண்டிட்டு, — ,, 2-5-4

தேனுகாசுர வதம்

வாசியாகி நேசமின்றி வந்தெதிர்ந்த தேனுகன்
நாசமாகி நாளுலப்ப நன்மைசேர் பனங்கனிக்கு
வீசி மேல் நிமிர்ந்த தோளிலில்லையாக்கி, — திருச்சந்த 80

காளிய மர்த்தனம்

ஆய்ச்சிமார்களும் ஆயரும் அஞ்சிடப் — நாய்ச்சியார் 4-4
பூத்த நீள் கடம்பேறித்
தடம்படு தாமரைப் பொய்கை கலக்கி — பெரியாழ் 2-10-3
விடம்படு நாகத்தை வால்பற்றி யீர்த்துப்
படம்படு பைந்தலை மேலெழப் பாய்ந்திட்டு
உடம்பை யசைத்து — ,, 3-9-9
வேயின் குழலூதி வித்தகனாய் நின்று — ,, 3-9-7
நீண்முடி யைந்திலும் நின்று நடஞ்செய்து, — நாய்ச்சியார் 12-7

பிரலம்ப வதம்

பாண்டி வடத்தில்
பிலம்பன்றன்னைப் பண்ணழியப் பலதேவன் வெல்ல

கண்ணன் காட்டுத்தீயை விழுங்கல்

நின்ற செந்தீமொண்டு சூறை நீள்விசும்பூடு இரியக் — பெரிய 1-7-5
காண்கின்ற வெந்தீயெல்லாம் யானே யென்று — திருவாய் 5-6-3
தான் விழுங்கி யுய்யக் கொண்டு, — பெரிய 11-6-7

கண்ணன் வேணுகானஞ் செய்தல்

வள்ளி நுடங்கிடை மாதர் வந்தலர் தூற்றிடத் — பெரியாழ் 3-2-7
துள்ளி விளையாடித் தோழரோடு
கானகம்படி யுலாவி யுலாவிச் — ,, 3-6-4
சிறு விரல்கள் தடவிப் பரிமாறச் செங்கண் கோடச் — ,, 3-6-8
[செய்யவாய் கொப்பளிப்பக்
குறுவெயர்ப் புருவம் கூடலிப்பக்

பாசுரக் குறிப்பு

கோவலர் சிறுமியர் இளங்கொங்கை குதுகலிப்ப
மேனகையொடு திலோத்தமை யரம்பை உருப்பசியரவர்
[வெள்கி மயங்கி பெரியாழ் 3-6-4
கன்னரம்புடைய தும்புருவோடு நாரதனும் தந்தம் வீணை 3-6-5
[மறப்பப் ,,
பறவையின் கணங்கள் கூடு துறந்து வந்து சூழ்ந்து படுகாடு 3-6-8
[கிடப்பக் ,,
கறவையின் கணங்கள் கால் பரப்பிட்டுக் கவிழ்ந்திறங்க
மருண்ட மான்கணங்கள் மேய்கை மறந்து மேய்ந்த புல்லுங்
[கடைவாய் வழி சோர 3-6-9
இரண்டு பாடும் துலுங்காப் புடை பெயரா ,,
எழுது சித்திரங்கள் போல நிற்க
மரங்கள் நின்று மதுதாரைகள் பாய 3-6-10
மலர்கள் வீழ வளர் கொம்புகள் தாழக் ,,
கோவிந்தனுடைய கோமள வாயில்
குழல் முழஞ்சுகளினூடு குமிழ்த்துக்
கொழித்திழிந்த அமுதப்புனல் தன்னை 3-4-4
குழல் முழவம் விளம்பக் கோவலனைக் குழலூதியூதி, ,,

கோபியர் வஸ்திராபஹரணம்

திருப்பாவை 1
மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில் நாய்ச்சியார் 3-1
கோழியழைப்பதன் முன்னம் குடைந்து நீராடுவான் போந்த
பங்கய நீர் குடைந்தாடுகின்றார்கள் ஆயர் மடமக்களைப்
[பின்னே சென்றொளித்திருந்து
அங்கவர் பூந்துகில் வாரிக் கொண்டிட்டு அரவேரிடை யார்
[இரப்ப
மங்கை நல்லீர் வந்து கொண்மினென்று மரமேறி யிருந்து பெரிய 10-7-1
கன்னியரோடு எங்கள் நம்பி கரிய பிரான் விளையாடி, நாய்ச்சியார் 3-10

வேள்வி மங்கையர் போக்கியான்னம் சமர்ப்பித்தது

பத்த விலோசனத்தில் 12-6
வேர்த்துப் பசித்து வயிறசைந்து வேண்டடிசிலுண்டு ,,

கோவர்த்தனத்தைக் குடையாக எடுத்தது

இந்திரனுக் கென்று ஆயர்களெடுத்த எழில் விழவில் பழ
[நடைசெய்
பெரிய 2-3-4
மந்திர விதியில் பூசனை பெறாது
இமயப் பெருமலை போல் 4-2-3
அமைத்த சோறது வெல்லாம் ,,
போயிருந்தங் கொரு பூதவடிவு கொண்டு 10-7-7
முற்ற வாரி வளைத்துண்ண, ,,
மேலை யமரர்பதி மிக்கு வெகுண்டுவர பெரியாழ் 1-6-2
காளநன் மேகமவை கல்லொடு கார்பொழிய பெரியாழ் 5-1-8
வண்ணமால் வரையே குடையாகச் 3-5 6
செந்தாமரைக்கை விரலைந்தினையும் ,,

பாசுரக் குறிப்பு

கப்பாக மடுத்து மணி நெடுந்தோள்   பெரியாழ் 3-5-6
காம்பாகக் கொடுத்துக்
கல்லெடுத்துக் கன்மாரி காத்து   திருநெடுந் 13

கண்ணன் கோபியரோடு விளையாடல்

மங்கல நல் வனமாலை மார்வில் இலங்க மயில் தழைப் [பீலி சூடிப்
பொங்கிள வாடை யரையிற் சாத்திப் பூங் கொத்துக் [காதிற் புணரப் பெய்து
கொங்கு நறுங்குழலார்களோடு குழைந்து குழலினிதூதி,   பெருமாள் 6-9
கொல்லைமை செய்து குரவை பிணைந்து,   திருவாய் 4-2-2
சுழலக் குடங்கள் தலை மீதெடுத்துக் கொண்டாடி,   பெரியதிருவந் 31
மன்றமரக் கூத்தாடி மகிழ்ந்து   திருநெடுந் 16
தேனும் பாலுங் கன்னலும் அமுதுமாகித் தித்தித்து,   திருவாய் 8-3-4
முற்று இளையார் விளையாட்டொடு
காதல் வெள்ளம் விளைவித்து   பெரிய 3-8-8

கேசிவதம்

மாவாயின் அங்கம் மதியாது கீறி,   ,, 3-2-8

கண்ணனும் பலராமனும் மதுரைக்கு எழுந்தருளல்

வில்லார் விழவில் வடமதுரை விரும்பி   ,, 6-7-5

கூனியினுடைய கூனலை நிமிர்த்தல்

நாறிய சாந்தம் நமக்கிறை நல்கென்னத்
தேறி அவளும் திருவுடம்பில் பூச   பெரியாழ் 1-9-4
ஊறிய கூனினை உள்ளொடுங்க அன்று ஏற வுருவி,

குவலயாபீட வதம்

விற்பிடித்திறுத்து,
வளவெழுந் தவளமாட மதுரைமா நகரந் தன்னுள்   பெரியாழ் 4-7-7
வெம்பு சினத்து அடல் வேழம் வீழ   திருமாலை 45
வெண் மருப்பு ஒன்று பறித்து,   பெரிய 2-2-8

மல்லர் வதம்

இருமலை போல் எதிர்ந்த மல்லர் இருவர்
வலிய முடியிடிய வாங்கி   பெரியாழ் 2-2-8
பெரியதிருவந் 41

கம்ஸ வதம்

செம்பொனிலங்கு வலங்கை வாளி
திண்சிலை தண்டொடு சங்க மொள்வாள்
உம்பரிரு சுடராழியோடு
கேடக மொண்மலர் பற்றித்
தொட்ட படை யெட்டும் தோலாத வென்றியான்   பெரிய 2-8-3
கறுத்திட்டெதிர் நின்ற   மூன்றும் 99
பெரியாழ் 2-6-3

பாசுரக் குறிப்பு

கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்று — திருப்பாவை 25
அரையனை எழப் பாய்ந்துதைத்துக் — பெரியாழ் 4-7-7
குஞ்சி பிடித்தடித்து — பெரிய 3-10-3
உயிரது வுண்டு — ,, 3-10-9
அவன் மாளக் கண்டு, — திருக்குறுந் 1

சாந்தீபினியின் புத்திரனை மீட்டுக்கொடுத்தது

மாதவத்தோன் புத்திரன் போய் மறிகடல்வாய்மாண்டானை — பெரியாழ் 4-8-1
ஓதுவித்த தக்கணையா வுருவுருவே கொடுத்து,

ருக்மிணி பரிணயம்

கண்ணாலங் கோடித்துக் கன்னி தன்னைக் கைப் பிடிப்பான் — நாய்ச்சியார் 11-9
திண்ணார்ந்திருந்த சிசுபாலன் தேசழிந்து
அண்ணாந்திருக்கவே ஆங்கவளைக் கைப்பிடித்து
உருப்பிணி நங்கையைத் தேரேற்றிக் கொண்டு — பெரியாழ் 3-9-3
விருப்புற்று அங்கேக விரைந் தெதிர்வந்து
செருக்குற்றான் வீரம் சிதையத் தலையைச் சிரைத்து
அன்று அங்கு அமர் வென்று நங்கையணி நெடுந்தோள் — திருவாய் 7-10-6
[புணர்ந்து
ஏடிலங்கு தாமரை போற் செவ்வாய் முறுவல் செய் — பெரிய 7-5-6
திருவுக்கும் திருவாகிய செல்வனைப் [தருளித் — ,, 7-7-1
பெண்ணமுதுண்டு, — ,, 6-1-2

ஏழ்விடை செற்றுப் பின்னையை மணந்தது

துப்புடையாயர்கள் தம் சொல் வழுவாதொரு கால்
தூயகருங் குழல் நல்தோகை மயிலனைய
நப்பினை தன் திறமா நல்விடை யேழவிய — பெரியாழ் 1-4-7
வீயப் பொருது வியர்த்து நின்று, — ,, 4-1-4

நரகாசுர வதம்

மன்னு நரகன் தன்னைச் சூழ்போகி வளைத் தெறிந்து
கன்னி மகளிர் தம்மைக் கவர்ந்து, — ,, 4-3-3

துவாரகை ஏற்படுத்தியது

பதினாறும் ஆயிரவர் தேவிமார் பணி செய்யத் துவரை
அதில் நாயகராகி வீற்றிருந்து, [யென்னும் — ,, 4-9-4

பாரிஜாதாபஹரணம்

என்னுதன் தேவிக்கு அன்று இன்பப்பூ ஈயாதாள்
தன்னுதன் காணவே தண்பூ மரத்தினை
வல்நாதப் புள்ளால் வலியப் பறித்துக் — ,, 3-9-1
கற்பகக்காவு கருதிய காதலிக்கு
இப்பொழுது ஈவனென்று இந்திரன் காவினில்
நிற்பன செய்து நிலாத்திகழ் முற்றத்துள்
உய்த்து, — பெரியாழ் 2-1-9

பாசுரக் குறிப்பு

வாணனுயிரந் தோள் துணித்தது

மாவலி தன்னுடைய மகன்வாணன் மகளிருந்த
காவலைக் கட்டழித்துப் — பெரியாழ் 4-3-4
பரிவின்றி வாணனைக் காத்துமென்று அன்று படை [யொடும் வந்தெதிர்ந்த
திரிபுரஞ் செற்றவனும் மகனும் பின்னும் அங்கியும் போர் [தொலையப்
பொரு சிறைப்புள்ளைக் கடாவிப் — திருவாய் 3-10-4
பொருகடலை யரண் கடந்து புக்கு — திருநெடுந் 20
மாயப் பொருபடை வாணனை ஆயிரந்தோளும் பொழி
பாய ஆழி சுழற்றி, [குருதி — திருப்பல்லாண்டு 7

பௌண்ட்ரக வாசுதேவ பங்கம்

புகாருருவாகி முனிந்தவனைப் புகழ்வீட முனிந்து [உயிருண்டு அசுரன்
நகராயின பாழ்பட நாம மெறிந்து — பெரிய 2-4-7
காய் சினத்த காசி மன்னன்
நாச முற்று வீழ நாள் கவர்ந்து, — திருச்சந்த 107

சிசுபால வதம்

கேட்பார் செவிசுடு கீழ்மை வசவுகளே வையும்
சேட்பாற் பழம் பகைவன் சிசுபாலன் திருவடி [தாட்பாலடையப் — திருவாய் 7-5-3
பெருந்துன்பம் வேரற நீக்கித்தன் தாளிணைக்கீழ்ச் [சேர்த்துப் — திருவாய் 7-5-10

தந்த வக்கரனை முடித்தல்

பொங்கரவ வக்கரனைக் கொன்று, — மூன்றும் 21

திரௌபதி கண்ணனைச் சரணமடைதல்

அந்தகன் சிறுவன் அரசர் தமரசற் கிளையவன் அணி [யிழையைச் சென்று
"எந்தமக் குரிமை செய்" எனத்தரியாது "எம் பெரு [மான் ! அருள்" என்ன — பெரிய 2-3-6

கண்ணன் விச்வ ரூபமெடுத்தது

பங்கயக் கண்ணன்
ஒன்றே யுரைப்பான் ஒரு சொல்லே சொல்லுவான் — திருவாய் 3-4-6
துன்று முடியான் துரியோதனன் பக்கல் சென்று,
கோதை வேல் ஐவர்க்காய் மண்ணகலம் கூறிடுவான் — பெரியாழ் 2-6-4
தூதனாய் மன்னவனாற் சொல்லுண்டு, — பெரிய 11-5-7
அரவு நீள் கொடியோன் அவையுள் ஆசனத்தை [யஞ்சிடாதேயிட அதற்குப் — ,, 9-1-8

பாசுரக் குறிப்பு

பெரிய மாமேனி யண்டம் ஊடுருவப் பெருந்திசை [படங்கிட நிமிர்ந்து, — பெரிய 9-1-8
ஊரொன்று வேண்டிப் பெறாத வுரோடத்தால் — பெரியாழ் 2-6-5
மண்மிசைப் பெரும்பாரம் நீங்கவோர் பாரதமாப் [பெரும்போரில் — திருவாய் 6-4-10

பார்த்தன் தேரில் கண்ணன் பாகனாய் நின்றது

பற்றலர் வீயக் கோல் கையில் கொண்டு பார்த்தன் தன் [தேர்முன் நின்று — பெரிய 2-3-1

அர்ச்சுனன், கண்ணனது சேவடிமேல் அர்ச்சித்த பூவைச் சிவபிரான் முடியிற் கண்டது

தீர்கனுலகளந்த சேவடி மேற் பூந்தாமம்
சேர்த்தி அவையே சிவன் முடிமேல் தான் கண்டு
பார்த்தன் தெளிந்தொழிய — திருவாய் 2-8-6

கீதை யுபதேசம்

அறிவினாற் குறைவில்லா அகன்ஞாலத் தவரறிய
நெறியெல்லா மெடுத்துரைத்து — ,, 4-8-6
நீர்மையில் நூற்றுவர்வீய ஐவர்க்கருள் செய்து நின்று, — ,, 3-5-7

ஜயத்ரதனை மடித்தது

ஆழி கொண்டன்று இரவி மறைப்பச் சயத்திரதன் [தலையைப்
பாழிலுருளப் படைபொருது, — பெரியாழ் 4-1-8

பரிக்ஷித்தை உயிர் மீட்டருளியது

மருமகன் தன் சந்ததியை உயிர்மீட்டு மைத்துனன்மார்
உருமகத்தே வீழாமே குருமுகமாய்க் காத்து, — ,, 4-8-3
எல்லாச் சேனையும் இரு நிலத்து அவித்து — திருவாய் 3-2-3
சந்தம் அல்குழலாள் அலக்கண் நூற்றுவர் தம் [பெண்டிருமெய்தி நூலிழப்ப, — பெரிய 2-3-6
மைத்துனன்மார் காதலியை மயிர் முடிப்பித்து [அவர்களையே மன்னாக்கி, — பெரியாழ் 4-9-6

வைதிகன் பிள்ளைகளை மீட்டுக் கொடுத்தல்

வேதவாய் மொழி யந்தணன் ஒருவன் "எந்தை நின் [சரண், என்னுடை மனைவி
காதல் மக்களைப் பயத்தலும் காணாள் கடிய தெய்வங் [கொண்டொளிக்கும்" என்றழைப்ப, — பெரிய 5-8-8
இடரின்றியே ஒருநாள் ஒரு போழ்தில் எல்லா வுலகுங் [கழியப்
படர்புகழ்ப் பார்த்தனும் வைதிகனும் உடனேறத் [திண் தேர் கடவிச் — திருவாய் 3-10-5

பாசுரக்குறிப்பு

சுடரொளியாய் நின்ற தன்னுடைச் சோதியில் வைதி
[கன் பிள்ளைகளை
உடலொடுங் கொண்டு கொடுத்து, திருவாய் 3-10-5

ஆதியஞ் சோதி யுருச் சேர்தல்

துயரில் சுடரொளி தன்னுடைச் சோதி நின்ற வண்ணம்
[நிற்கவே
துயரில் மலியும் மனிசர் பிறவியில் தோன்றிக் கண்காண
[வந்து
துயரங்கள் செய்து தன் தெய்வ நிலையுலகிற் புகவுய்த்துக் ,, 3-10-6
கதையின் திருமொழியாய் நின்று, இரண்டாம் 64
நல்குரவும் செல்வும் நரகும் சுவர்க்கமுமாய்
வெல்பகையும் நட்பும் விடமும் அமுதமுமாய்ப்
பல் வகையும் பரந்து திருவாய் 6-3-1
வைகுந்தம் புகுதலும், ,, 10-9-9
எண்மர் பதினொருவர் ஈராறுவர் ஓரிருவர்
வண்ண மலரேந்தி வைகலும் நண்ணி
ஒரு மாலையால் பரவி ஓவாது எப்போதும்
மால்வண்ணன் தாள் தாமரை யடைவோமென்று முதல் 52
மறை கொண்ட மந்திரத்தால் வாழ்த்திச் நான்முகன் 91
சூட்டு நன்மாலைகள் தூயனவேந்தி ,, 9
ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி திருவிருத்தம் 21
யாழ்குழல் முழவமோடு இசை திசை கெழுமிக்
கீதங்கள் பாடி மயங்கித் திருவடி தொழ,
பாடுநல் வேதவொலி பரவைத்திரை போல் முழங்க, திருப்பள்ளி 9
ஆயிரம் பெயரால் அமரர் சென்றிறைஞ்ச, திருவாய் 5-9-3
உவந்த உள்ளத்தனாய் பெரிய 5-7-6
அண்டமாய் எண்டிசைக்கும் ஆதியாய் நீதியான அமலன் 2
பண்டமாம் பரம சோதியாய்
ஆடரவமளியில் அறிதுயிலமர, திருக்குறு 11
இடங்கொள் சமயத்தை யெல்லாம் எடுத்துக் களைவன திருவெழு
[போலே
தடங்கடல் பள்ளிப்பெருமான் தன்னுடைப் பூதங்
[களேயாய்க்
கிடந்து மிருந்தும் எழுந்தும் கீதம் பல பல பாடி
நடந்தும் பறந்தும் குனித்தும் நாடகம் செய்கின்றனவே
[நம்பால். திருவாய் 5-2-4

தோட்டலர் பைந்தார்ச் சுடர்முடியானைத்
தொழுது நன்மொழியால் தொகுத்துரைத்த
பாட்டிவை பாடப் பத்திமை பெருகிச்
சித்தமும் திருவொடு மிகுமே. பெரிய 10-9-10

போலிக போலிக போலிக ! திருவாய் 5-2-1
